## வகுப்பு - 7 - பருவம் - 1 - வரலாறு
## 2. வட இந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்

**பயிற்சி வினாக்கள்:**

1. ராஜபுதனத்தில் மிகவும் புகழ்பெற்றது ______.

   (1) மாளவம் (2) குஜராத் (3) சித்தூர் (4) கன்னோஜ்

2. சித்தூரின் ராணா மாளவத்தை வெற்றிகொண்டதன் நினைவாக நிறுவப்பட்ட தூண் ______.

   (1) ஜெய ஸ்தம்பா (2) கஜூராகோ (3) குதுப்மினார் (4) சாரணாத்

3. பந்தேல்கண்டின் ராஜபுத்திர இனக்குழு ______.

   (1) தோமரர்கள் (2) சந்தேலர்கள் (3) சௌகான்கள் (4) பரமாரர்கள்

4. ராஜபுத்திர அரசகுலங்களின் எண்ணிக்கை ______.

   (1) 16 (2) 26 (3) 36 (4) 46

5. கூர்ஜர அரச வம்சத்திற்கு அடிக்கல் நாட்டியவர் ______.

   (1) ஹரிச்சந்திரா (2) வத்சராஜா
   (3) முதலாம் போஜா (4) முதலாம் நாகபட்டர்

6. பிரதிகார அரசர்களுள் முதல் தலைசிறந்த அரசர் ______.

   (1) ஹரிச்சந்திரா (2) ராமபத்ரா
   (3) மிகிர போஜா (4) முதலாம் நாகபட்டர்

7. பால அரச வம்சத்தை உருவாக்கியவர் ______.

   (1) தர்மபாலர் (2) கோபாலர்
   (3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

8. விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் ______.

LIVEWORKSHEETS

(1) தர்மபாலர் (2) ஜெயபாலர்

(3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

9. பௌத்த கல்விக்கான மிகச்சிறந்த மையம் ______.

(1) விக்கிரமசீலா (2) நாளந்தா (3) கஜூராகோ (4) தில்வாரா

10. பௌத்தர்களுக்கு ஐந்து கிராமங்களை கொடையாக வழங்கியவர் ______.

(1) ஜெயபாலர் (2) தர்மபாலர்

(3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

11. தர்மபாலர், தேவபாலர் ஆகியோரின் ஆட்சிக் காலங்கள் வங்காள வரலாற்றின் சிறப்புமிக்க ஒளிரும் அத்தியாயங்கள் என கூறிய அறிஞர் ______.

(1) அதிசா (2) சந்த் பார்தை (3) ஜேம்ஸ் டாட் (4) ஆர்.சி. மஜூம்தார்

12. பால வம்சத்தின் மிகச்சிறந்த, வலிமைமிக்க அரசர் ______.

(1) தர்மபாலர் (2) ஜெயபாலர்

(3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

13. யாருடைய படையெடுப்பின் காரணமாக வாரணாசிக்கு அப்பால் தனது அதிகாரத்தை விரிவுபடுத்த முதலாம் மகிபாலரால் இயலாமல் போயிற்று?

(1) ராஜராஜ சோழன் (2) ராஜேந்திர சோழன்

(3) குலோத்துங்கன் (4) சிம்மராஜன்

14. சௌகான்கள் எனும் ராஜபுத்திர அரச வம்சத்தை தோற்றுவித்தவர் ______.

(1) சிம்மராஜ் (2) பிருதிவிராஜ் (3) போஜராஜ் (4) தேவராஜ்

15. சௌகான் வம்சாவளி அரசர்களுள் தலை சிறந்தவர் ______.

(1) சிம்மராஜ் (2) பிருதிவிராஜ் (3) போஜராஜ் (4) தேவராஜ்

16. பிருதிவிராஜ ராசோ எனும் நூலை எழுதியவர் ______.

LIVEWORKSHEETS

(1) கல்ஹணர் (2) விசாகதத்தர் (3) ராஜசேகரர் (4) சந்த் பார்தை

17. முதல் தரெய்ன் போரில் வெற்றி பெற்றவர் ______ : தோல்வியுற்றவர் ______

(1) பிருதிவிராஜ் சௌகான் : முகமது கோரி

(2) முகமது கோரி : பிருதிவிராஜ் சௌகான்

(3) சிம்மராஜ் சௌகான் : முகமது கோரி

(4) முகமது கோரி : சிம்மராஜ் சௌகான்

18. இரண்டாம் தரெய்ன் போர் நடைபெற்ற ஆண்டு ______.

(1) 1191 (2) 1192 (3) 1193 (4) 1194

19. பொருத்துக:

(i) சூரியனார் கோவில் - a) மத்தியப்பிரதேசம்

(ii) தில்வாரா சமணக்கோவில் - b) கோனார்க்

(iii) காந்தர்யா கோவில் - c) பந்தேல்கண்ட்

(iv) கஜூராகோ கோவில - d) அபுகுன்று

(1) (i) - b (ii) - a (iii) - c (iv) - d (2) (i) - c (ii) - a (iii) - d (iv) - b

(3) (i) - c (ii) - a (iii) - b (iv) - d (4) (i) - b (ii) - d (iii) - a (iv) - c

20. ரக்ஷாபந்தன் என்ற மரபு யாருக்கு உரியது?

(1) சோழர்கள் (2) பாலர்கள் (3) ராஜபுத்திரர்கள் (4) அரேபியர்கள்

21. வங்கப்பிரிவினையின் போது பெருமளவில் மக்கள் பங்கேற்ற ரக்ஷாபந்தன் விழாவைத் தொடங்கியவர் ______.

(1) ரவீந்திரநாத் தாகூர் (2) மகிபாலர்

(3) பகத்சிங் (4) பாலகங்காதர திலகர்

22. திபெத்திய பௌத்தத்தை சீர்செய்தவர் ______.

(1) அதிசா (2) சந்த் பார்தை (3) ஜேம்ஸ் டாட் (4) ஆர்.சி.மஜூம்தார்

LIVEWORKSHEETS

23. ஓர் இஸ்லாமிய அரசு அரசியல்ரீதியாகவும், மதரீதியாகவும் ஒரே நபரால் ஆளப்பட்டால் அவ்வரசு _______ என்றழைக்கப்பட்டது.

(1) உமையத்து (2) கலீஃபத் (3) அப்பாசித்து (4) எதுவுமில்லை

24. கஜினி மாமூது இந்தியாவின் மீது _______ முறை படையெடுப்பு நடத்தியதாகக் கூறப்படுகிறது.

(1) 11 (2) 13 (3) 15 (4) 17

25. கஜினி மாமூதின் இந்திய படையெடுப்பிற்கு முக்கியக் காரணம் _______.

(1) சிலை வழிபாட்டை ஒழிப்பது

(2) செல்வங்களை சூறையாடல்

(3) இந்தியாவில் இஸ்லாமை பரப்புவது

(4) இந்தியாவில் ஒரு முஸ்லீம் அரசை நிறுவுவது

26. மாமூது கஜினியால் தோற்கடிக்கப்பட்ட பஞ்சாபின் ஷாகி வம்ச அரசர் _______.

(1) ஆனந்தபாலர் (2) ஜெயபாலர் (3) மகிபாலர் (4) தருமபாலர்

27. முகமது பின் காசிம் தோற்கடித்த சிந்து மன்னன் _______.

(1) தாகீர் (2) சுல்தான் (3) முகமது கோரி (4) பீமதேவர்

28. சிந்துவின் தலைநகராக இருந்தது _______

(1) கன்னோஜ் (2) அரோர் (3) தானேஸ்வர் (4) நாகர்கோட்

29. இந்தியர்களிடமிருந்து மேலைநாட்டவரும், அரேபியரும் கற்றுக் கொண்ட விளையாட்டு_______.

(1) கபடி (2) கைப்பந்து (3) சதுரங்கம் (4) ஹாக்கி

30. கஜினி மாமூது புனித நகரமான மதுராவைக் கொள்ளையடித்த ஆண்டு _______.

(1) 1018 (2) 1019 (3) 1020 (4) 1021

LIVEWORKSHEETS

31. "டெல்லியின் முதல் சுல்தான்" என தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர்

(1) குத்புதீன் ஐபக் (2) கஜினி மாமூது (3) அல்ப்-டஜின் (4) சபக்டிஜின்

32. இந்தியாவின் மீதான கஜினி மாமூதின் இறுதி படையெடுப்பு ______.

(1) புனிதநகர் மதுராவில் கொள்ளையடிப்பு

(2) அன்கில்வாட் நகரை சூறையாடியது

(3) தானேஸ்வர் நகரை சூறையாடியது

(4) சோமநாதபுரம் கோவில் கொள்ளையடிப்பு

33. ராஜபுத்திரர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்திய போர் ______.

(1) முதல் தரெய்ன் போர் (2) இரண்டாம் தரெய்ன் போர்

(3) மூன்றாம் தரெய்ன் போர் (4) நான்காம் தரெய்ன் போர்

34. ______ மீது ஆதிக்கம் நிறுவவே மும்முனைப் போராட்டம் நடைபெற்றது.

(1) குஜராத் (2) பந்தேல்கண்ட் (3) கன்னோஜ் (4) அரோர்

35. இந்தியாவில் முதல் இஸ்லாமியப் பேரரசை உருவாக்கியவர் ______.

(1) முகமது கோரி (2) கஜினி மாமூது (3) குத்புதீன் ஐபக் (4) அல்ப்-டஜின்

LIVEWORKSHEETS